### இந்தியாவிலேயே முதல்முறையாக

# கோவை கங்கா மருத்துவமனையில் 'ஏர் ஆம்புலன்ஸ்' சேவை துவக்கம்



▶ இந்தியாவிலேயே முதன் முறையாக கோவை கங்கா மருத்துவமனை சார்பில் 'ஏர் ஆம்புலன்ஸ்' சேவை துவக்கப்பட்டுள்ளது. இதற்கான ஹெலிகாப்டருடன், மருத்துவமனை தலைவர் டாக்டர் சண்முகநாதன், இயக்குனர்கள் டாக்டர் ராஜசபாபதி, டாக்டர் ராஜசேகரன் ஆகியோர் உள்ளனர்.

**கோவை, ஜூன் 24:** இந்தியாவிலேயே முதன் முறையாக கோவை கங்கா மருத்துவமனை சார்பில் 'ஏர் ஆம்புலன்ஸ்' சேவை துவக்கப்பட்டுள்ளது. இதற்கான ஹெலிபேட், துடியலூர் வட்டமலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டம் குறித்து, கங்கா மருத்துவமனை தலைவர் டாக்டர் சண்முகநாதன், இயக்குனர்கள் டாக்டர் ராஜசபாபதி, டாக்டர் ராஜசேகரன் ஆகியோர் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

"இந்தியாவிலேயே முதல் முறையாக கோவை கங்கா மருத்துவமனை சார்பில் 'ஏர் ஆம்புலன்ஸ்' சேவை துவக்கப்பட்டுள்ளது. கங்கா மருத்துவமனை மட்டுமின்றி, அனைத்து மருத்துவமனைகளும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இதற்காக, நவீன மருத்துவ உபகரணங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் மூலம், பெங்களூர், சென்னை, திருவனந்தபுரம் உள்பட 500 கி.மீ தூரத்திற்கு இடைவிடாமல் பறக்க முடியும். எரிபொருள் நிரப்ப இடையில் தரையிறங்கவேண்டிய அவசியம் இல்லை. இந்த ஹெலிகாப்டர், 'அகுஸ்தா 199' ரகத்தை சேர்ந்தது. இத்தாலி நாட்டில் தயாரிக்கப்பட்டது. இதில், 2 பைலட்,' 1 மருத்துவர், நோயாளி, அவரது உறவினர் என 5 பேர் பயணிக்க முடியும்.

இதில், அவசர சிகிச்சைக்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர், வென்டிலேட்டர், இதய துடிப்பை சீராக வைக்கும் கருவி உள்ளிட்ட அனைத்து மருத்துவ கருவிகளும் உள்ளது. சாலை மார்க்கமாக நீண்ட தூரம் பயணித்து, மருத்துவமனையை அடையாமல், மிக குறுகிய நேரத்தில் இந்த ஏர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையை அடைய முடியும். இதன் மூலம், அபாய கட்டத்தில் இருந்து நோயாளியை காப்பாற்ற முடியும்.

நோயாளிகள் மட்டுமின்றி, அவசர அறுவை சிகிச்சைக்காக உடல் உறுப்புகளான இதயம், கல்லீரல், கிட்னி, கண் போன்றவற்றையும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல முடியும். விமான போக்குவரத்து துறையின் அனுமதியுடன் இந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவை துவக்கப்பட்டுள்ளது.

இப்புதிய மருத்துவ சேவை துவக்கவிழா வரும் 25ம்தேதி (ஞாயிறு) மாலை 5 மணிக்கு நடக்கிறது. இந்திய விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் தனோவா துவக்கிவைக்கிறார். வருமான வரித்துறை கமிஷனர் ஸ்ரீவத்சவா, ஏர் மார்ஷல் அனில் பெகல், கோவை மாவட்ட கலெக்டர் ஹரிகரன், கோவை மாநகர போலீஸ் கமிஷ்னர் அமல்ராஜ், மேற்கு மண்டல ஐ.ஜி பாரி, முதன்மை கேப்டன் பட்டாச்சாரியா, கேப்டன் நவீன் மற்றும் காயத்ரி அனந்தராமன் உள்பட பலர் கலந்துகொள்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.